DINAMALAR

29 AUG 2022

PAGE 4

# பல்கலை., துணைவேந்தர் ஜனாதிபதியுடன் சந்திப்பு



புதுச்சேரி பல்கலைக்கழக துணை வேந்தர் குர்மீத்சிங், டில்லியில் ஜனாதிபதி திரவுபதி முர்முவை மரியாதை நிமித்தமாக சந்தித்து பேசினார்.

புதுச்சேரி, ஆக. 29–

புதுச்சேரி பல்கலைக்கழக துணை வேந்தர் குர்மீத்சிங், ஜனாதிபதி, மத்திய அமைச்சர்களை மரியாதை நிமித்தமாக சந்தித்தார்.

புதுச்சேரி பல்கலைக்கழக துணை வேந்தர் குர்மீத்சிங், இந்திய ஜனாதிபதி திரவுபதி முர்முவை, கடந்த 25ம் தேதி ராஷ்டிரபதி பவனில் மரியாதை நிமித்தமாக சந்தித்தார்.துணை வேந்தரின் மனைவி டாக்டர் குர்மீத் கவுர் உடனிருந்தார்.

கடந்த 26ம் தேதி, நாடாளுமன்ற விவகாரங்கள், கலாசார அமைச்சர் அர்ஜூன் ராம் மேக்வால், சாலை போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், சிவில் விமான போக்குவரத்து துறை அமைச்சர் ஜெனரல் விஜய்குமார் சிங் ஆகியோரை, துணைவேந்தர் சந்தித்துப் பேசினார்.அப்போது, புதுச்சேரி பல்கலைக்கழகம், திண்டுக்கல், காந்திகிராம் நிகர்நிலை பல்கலைக் கழகத்தின் வளர்ச்சிப் பணிகள் பற்றி ஆலோசனை செய்தார்.